1993 ஏப்ரல் 26]

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டச் சட்டம் 1971-ன் கீழ் மற்றும் வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளின் கீழ் மனைப் பரப்பு 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்குமாயின் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சின்ன, சின்ன வீட்டு மனைகளுக்கு இப்படிப்பட்ட நிலை இல்லை என்பதையும் இப்படி 75 செண்ட் அல்லது 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்கின்ற நிலப்பரப்பிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற இந்தக் கட்டணத்தை ஜெனரல் டெவலப்மென்ட் பண்டு என்று சொல்லக்கூடிய சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலுள்ள பொது வளர்ச்சி நிதியில் இது வைக்கப்படுகிறது. சென்னை பெருநகர பகுதிக்குத் தேவைப்படுகின்ற திட்டங்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்தப் பணத்தை செலவழிக்கிறோம். அதேபோல உள்ளாட்சித் துறையிலும் பூங்காக்கள் அமைத்தல் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், வணிக வளாகங்கள் அமைத்தல் மற்றும் இடபாடு மேம்பாடு, சாலைகள் மேம்பாடு போன்ற எல்லா வகையான வளர்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தக் கட்டணம் பயன்படுகின்ற காரணத்தால் விதிவிலக்கு அளிக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 478 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

478—

ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலங்கள்

*9699—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை குன்றுகள் கிராமம், வால்பாறை நகரிய விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபற்றி அப்பகுதி ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை எதுவும் வரப்பெற

வில்லை. இருப்பினும் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து விவரங்கள் பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு, குறிப்பாக ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கவேண்டும் என்ற ஒரு சீரிய திட்டத்தை, ஒரு புரட்சிகரமான திட்டத்தை ஏற்படுத்திப் புனித பாதையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வால்பாறையைப் பற்றி நன்கு தெரியும். வால்பாறையில் இருக்க கூடிய, ஆதி திராவிடர் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் இலவச மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் என்னிடத்தில் கோரிக்கை வைக்கிறார்கள். பல்வேறு தொகுதியில் ஆயிரம் வீட்டுமனைப் பட்டா, 500 வீட்டுமனைப் பட்டா என்று அறிவிப்பு வருகிற இந்த நேரத்தில் வால்பாறையில் இதுவரையில் ஒரு வீட்டுமனைப் பட்டா கூட இலவசமாக அங்குள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனைச் செய்து காலதாமதமின்றி அங்குள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலை இந்த ஆண்டே பரிசீலித்து மனைப்பட்டா வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையைக் கொடுத்தேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட துறைக்கு இந்தக் கோரிக்கை சம்பந்தமாக தகவல் அனுப்பப் பட்டிருக்கிறது. நானும் இது தொடர்பாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். நமது அரசுக்குச் சொந்தமான நிலங்கள் வால்பாறையில் இல்லாததால் இந்த

1993 ஏப்ரல் 26]

ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்புச்செய்து கம்பல்சரி குயூசேஷன் செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்குப் பரிந்துரை செய்து இருப்பதாக தகவல் தெரிய வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்திருப்பதைப் போல் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த 500 பேருக்கு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 479, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

479—

பெரியகல்வராயன் மலையில் பழப்பண்ணை அமைத்தல்.

*9453—திரு. வெ. தமிழரசு :
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகல்வராயன் மலையில் மலைவாழ் மக்களுக்கு பயன் ஏற்படும் வகையில் பழப்பண்ணை அமைக்கப் படுமா —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரு முறை கூட நமது இயக்கம் வெற்றி பெற இயலவில்லை. ஆனால் நம்முடைய இதய தெய்வத்தின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS